# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


**அறிவிப்பு**

காந்திய- சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.


மலர் 12 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 105) 1975 சனவரி- | இதழ்—4


# கிராம சுயராஜ்யம் எமது பிறப்புரிமை

## அதை அடைந்தே தீருவோம்

டால்ஸ்டாய் கிராம மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பல கதைகளையும், கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவர் சிறந்த தத்துவஞானியும் கூட. அவர் எழுதிய ஒரு கதையில் கீழ்க்கண்டவராறு தரப்பட்டுள்ளது. '' ஒரு கிராமத்தில் ஒரு வீட்டிற்குள் தாயார் அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய சிறிய குழந்தை அவளை அணுகி, '' அம்மா, ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டாள்.

''மாவட்ட நீதிமன்றத்தில் நமக்கெதிராகத் தீர்ப்பாயிருக்கிறது'' என்றாள் தாய். சிறுமியின் தந்தை, '' அழுவதால் என்ன பயன்? மேல் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்வோம்'' என்று ஆறுதல் கூறினார். மேல்நீதிமன்றத்திற்கும் முறையீடு செய்யப்பட்டது. அங்கும் அவர்களுக்கு எதிராகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது. மீண்டும் தாய் அழத் தொடங்கினாள். தந்தை '' அடுத்த மேல்நீதிமன்றத்திற்கு முறையீடு செய்வோம்'' என்று மீண்டும் ஆறுதல் கூறினார். உயர்நீதிமன்றத்திலும் தீர்ப்பு எதிராகவே இருந்தது.

சிறுமி தந்தையை அணுகி '' இப்போது என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று கேட்டாள். '' இப்பொழுது ஆண்டவனிடம் முறையிடுவோம்'' என்று கூறினார். அப்பொழுது, அச்சிறுமி, '' இறுதியில் ஆண்டவனிடம் முறையிட வேண்டியிருந்தது என்றால், இதை முன்பே ஏன் செய்யவில்லை? என்று கேட்டாள். டால்ஸ்டாய் எழுதுகிறார்: '' தந்தையிடம் இந்தக்கேள்விக்கு விடையிருக்கவில்லை'' என்று.

நான் கூறுகிறேன், '' கிராமத்தில் சண்டையிடாதீர்கள்; அப்படிச் சண்டை சச்சரவு ஏற்பட்டால், முதலிலேயே ஆண்டவனிடம் முறையிடுங்கள். இங்குமங்கும் அடிபட்ட பிறகு தான் ஆண்டவனிடம் சொல்ல வேண்டுமா? கிராமத்துவழக்குகள் கிராமத்திலேயே தீர்த்து வைக்கப்படவேண்டும். அந்த கிராமநீதிமன்றம் தான் பஞ்சாயத்தும் ஆண்டவனும். கிராமத்திலுள்ள நம்பிக்கை வாய்ந்த, நல்லமனிதர்களின் கையில் நீதிப்பொறுப்பை ஒப்படைக்கவேண்டும். அவர்கள் செய்யும் முடிவே இறுதியானது.

சிலர், '' கிராமத்தில் இறைவன் எங்கே இருக்கிறான்? நீங்கள் கூறும் நல்ல மனிதர் எங்கேயிருக்கிறார்? நல்லவர்களைத் தேடிப்பிடிப்பது மிக அரிதாகிவிட்டதே.'' என்று கேட்கிறார்கள். அவர்களிடம் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். '' இராவணனின் நகரத்தில் கூட விபிஷணன் கிடைத்தானே அப்படியிருக்க, நமது கிராமங்கள் இராட்சசர்களின் ஊரைவிட மோசமாகி விட்டதா? நமது கிராமங்களில் நல்லவர்களே இல்லையென்று எப்படியிருக்க முடியும்? ஆண்டவன் அவ்வாறு செய்துவிடுவாரானால், ஆண்டவன் தற்கொலை செய்துகொண்டு விட்டார் என்று தான் பொருள். ஆண்டவன் திவாலாகி விட்டார் என்றால்; அவருடைய இராஜ்யமும் முடிவுற்றிருக்கிறது என்று பொருள். அதை இப்பொழுது 'சைத்தான்' ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான் என்று பொருள். கிராமத்தில் நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் நியாயம் வழங்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, அவர்கள் தீர்ப்பிற்கு மேலே செல்ல மாட்டோம் என்று உறுதி கொள்வோம். அப்பொழுது கிராம சுயராஜ்யம் உருவாகும்.

துளசிதாசர், இராமாயணத்தில் ஓர் இடத்தில், கிராம- சுயராஜ்யத்தின் இலக்கணமென்ன என்ற கேள்விக்கு விடையளிப்பதுபோல, இரண்டு இலட்சணங்களைக்குறிப்பிட்டிருக்கிறார். முதல் இலக்கணம்: '' யாரும் எவருடனும் பகைமை கொள்ளக்கூடாது என்பதே. இரண்டாவது இலக்கணம்: ''செல்வநிலையில் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு இருப்பது அநீதி'' என்பது. இதைத்தான் அவர் இராம- ராஜ்யம் என்றார்.

துளசிதாசர், கிராமத்தை எப்படி உறுதிப்படுத்துவது என்பது பற்றியும் ஒரு யுக்தியைநமக்குக் கூறியிருக்கிறார். உண்மையான செல்வம், பணம் காசல்ல; அது அழியக் கூடியது. இச்செல்வம் மூன்று வழிகளில் பயன் படும். அவை தானம், போகம், நாசம் என்பவையாகும். முதலில், தானம் கொடுக்கவே செல்வம் என்ற கருத்தை விளக்குகிறது. அச்செல்வம் நன்கு பயன்பட்டது என்பது பொருள். அப்படியில்லாவிட்டால் செல்வத்தை அனுபவிக்க வேண்டும், என்று பொருள். இவ்வாறு செய்யப்படா விட்டால், அச்செல்வம் நாசமடையும் என்று கூறுகிறார். இது மூன்றாவது வழி.

ஆகவே, நமது கிராமப் பொருளாதார அமைப்பு, செல்வமிகுதியைக் கருத்திற்கொள்ளாமல் இன்பமிகுதியையே மனதிற்கொண்டு அமைய வேண்டும்.

— விநோபா பாவே

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலை பேசி; 254

கிளிநொச்சி

காந்தி ஆண்டு 105

1975 சனவரி


## நன்றியில் செல்வம்

முதலாண்மை (கப்பிற்றலிசம்) சமூகவாதம் (சோசலிசம்) என்று உலகத்தவர் போட்டியிட்டு பொருட் செல்வத்தையே குறிக்கோளாகக் கொண்டு அபிவிருத்திட்டம், அரசாட்சி ஆகியவற்றை மாற்றி அமைக்க முனைகின்றனர்.

முதலாண்மை வாதம் சுயலாப நோக்கத்தாலேயே வளர்ந்து பெருவிருட்சமாக வேரூன்றி உள்ளது. முதலையிட்டுத் தொழில் செய்பவர் தம்முடைய செல்வப்பெருக்கையே குறிக்கோளாகக் கொண்டு பெருந்தொழில்களில் ஈடுபடுகின்றனர். இதிலிருந்து நமக்குப் புலப்படுவது என்ன? முதலாளிகளின் ஒரே நோக்கு பொருட் செல்வம், தன்னலம், இலாபம், அளவிலாது உயரும் பொருள் நுகர்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் தொழில் முயற்சியாகும்.

இந்த முறையையே இப்பொழுது முதலாளித்துவம் என்கிறார்கள்.

இதனால் பல்லாயிர மக்கள், ஒரு சிலரின் பொருளாசையால் அல்லற்பட்டுப் பரிதவிக்கிறார்கள்; வருத்தப்படுகிறார்கள். இந்த நிலையினைப் போக்கி தனியார் தன்னல ஆதிக்கத்தை நீக்கி எல்லோரும் பொருட்செல்வத்தைச் சரிவர நுகர்வதற்காகவே சோசலிசம என்னும் சமூகவாதம் தோன்றியது. இதன் நோக்கம் என்ன? பொருட் செல்வம் ஒரு வர்க்கத்திடம் குவியாமல் எல்லா மக்களிடமும் நன்முறையில் பகுத்தளிக்கப்படுவதே இதன் நோக்கம். இந்நோக்கம் நல்லது; செயற்படுத்தப்பட வேண்டியது.

ஆயின் இரண்டாவதான சோசலிசத்தின் நோக்கம் எல்லோரும் சம உடைமை உரிமை உடையவராய் வாழ வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டது. ஆயின் இதைச் செயன்முறைக்குக் கொண்டுவரும் பொழுது, இது அதன் பகைப் புலமான முதலாளித்துவத்தால் பெரிதும் உந்தப்பட்டு, செல்வத்தையும் செல்வம் தரும் அதிகாரத்தையுமே செயல் மையமாகக் கொண்டு விடுகிறது. இதனால் மக்கள் யாவரும் பொருள் அபிவிருத்தியையே பெரிதும் போற்றி உலோகாயத நெறியையே பின்பற்றுபவராகின்றனர்.

இருசாராரும் பொருள் பொருள் என்றும், நுகர்ச்சிப்பொருள் என்றும் ஓயாது கவலைகொண்டு விடுகின்றனர். சொத்தினால் வரும் அதிகாரத்தை உடைத்து அரசாட்சியால் வரும் அதிகாரத்தையே இந்தப்போக்கு இறுதியில் கொண்டு வந்து விடும். எதற்காக மனிதனை மனிதன் சுரண்டாமலிருக்க வேண்டும். செல்வத்தைப்பகிர்வதற்கா? சீவகாருண்ணியம் அல்லது மனிதாபிமான அன்பினாலா? எல்லோரும் உடல் உள நலம் பெற்று இன்பம்பெற்றிருக்க வேண்டுமென்னும் எண்ணத்தினாலல்லவா இந்தச்சமதர்மம் தோன்ற வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு எழாத எந்த வாதமும் ஈற்றில் பொருளீட்டல், அதிகாரவேட்டை என்பவற்றிலேயே முடியும்.

பொருளை மையமாகக் கொண்டு அபிவிருத்தியும் முன்னேற்றமும் கணிக்கப்படுவதால் தனிநபர்ப் போட்டிகள், வகுப்பு வாதங்கள், அதிகாரப்பிரிவுகளின் சச்சரவுகள், நாட்டுப்போர்கள் என்னும் குழுப்போட்டிகள் தோன்றுகின்றன. பொருட்செல்வம் தரும போகத்திலேயே மனிதர்மனம பதிந்து அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம என்கின்ற பண்புகளை மறந்துவிடுகின்றனர். வேண்டுமென்றும் புறக்கணிக்கின்றனர்.

இந்த மண்ணுலகம் தரக்கூடிய பொருளையே மனிதன் நுகரலாம். இந்தப்பூமியும் சூரியனும் தரக்கூடிய வளங்களைக் கொண்டே மனிதன் வாழவேண்டும். வரலாற்றின் விபரீதத்தால் சில மனிதர் தனி ஒரு மனிதன் பெறக்கூடிய பங்கிலும்கூடிய இயற்கை வளங்களைத் தனி ஒருவன் சுயபூர்த்திக்குப் பயன் படுத்துகிறான். . அவனைப் போல் அவன் குடும்பம், அவன் சமுதாயம், அவன் நாடு முதலியவை தம்தமக்கென, இயற்கை வளங்களைத் தம் தொழில் நுட்ப அறிவினால் பெருக்கித் தனிஒரு மனிதன் பங்கீட்டினால் பெறக்கூடிய அளவிலும் கூட நுகர்கின்றன. இதைப்பார்த்து மற்றையவர்களும் போட்டி பொறாமையால் தம் நுகர் பொருளைப்பெருக்குகின்றனர். இதனால் மனித ஆசை பெருகும்; நுகர் பொருளைத் தேடி மனிதர் அலைவர்; போரிடுவர். ஆனால் பூமியும் சூரியனும் இந்த ஆசைப்பெருக்கினையும், ஒத்து வளரும் மனிதப் பெருக்கினையும் தாங்க முடியுமா?

பெற்றோல் எண்ணெயைப் பாருங்கள், நிலக்கரியைப் பாருங்கள், உணவினைப் பாருங்கள், கடதாசியைப்பாருங்கள், இரும்பினைப் பாருங்கள். இவை மனிதன் விரும்பும் அளவிற்கு ஈடு கட்டக்கூடிய அளவில் பூமியில் உளவா?

என்ன செய்யலாம்? மனித இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று வளர்ச்சியடைந்த நாடுகள் கூறுகின்றன. வளர்ச்சியுற்று வரும் நாடுகளும் அவ்வழியே செல்கின்றன. ஆயின் ஒருவராகுதல் ஆசைப்பெருக்கத்தைக் குறைக்கச் சொல்லவில்லையே. அதுவல்லவே நுகர் பொருள் வேட்கையைக் குறைக்கும். கிடைக்கும் வளங்களை, மூளைவளங்களைப் பகிர்நது கொள்ள வழிகாட்டும்.

இதற்குத்தான் சர்வோதயம் தோன்றியது. புரட்சியின் புரட்சியால் வரும் ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தில் நாம் எதிர்பார்க்கும் நன்மைகளை இன்றே நாம் பெறலாம. எப்படி. மனிதன் இன்றே தன் தேவைகளைத் தன் சூழலைப் பயன் படுத்திப் பெறவும், அடுத்தவரோடு இப்பணியில் ஈடுபடவும், பங்காய் நுகரவும் அவை தரும் பயனோடு மன அமைவு பெறவும் அவன் பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுது எல்லாப் பெருக்கமும் புவிக்குள் அடங்கியதாயிருக்கும்.

எதையும் பகிர்ந்துண்ணும் பழக்கம் மனிதனுக்கு வேண்டும். உண்பது என்பது பஞ்சபுலன்களாலும் புத்தியாலும் நுகர்வதையே குறிக்கும்.

"பொருளான் ஆம் எல்லாம் என்று
ஈயாது இவறும்
மருளான் ஆம் மாணாப்பிறப்பு"

இது திருவள்ளுவர் கூற்று

பொருளால் எல்லாம கிடைக்கும் என்று ஈட்டி பிறர்க்கு ஈயாது தானே நுகரும் ஒருவன் பிறப்பு பேய்ப்பிறப்பு என்பது வள்ளுவர் கூற்று.

இத்தகைய செல்வமே நன்றியில் செல்வம் என்பது. இந்தச் செல்வம் உடையவனுக்கும் நன்மை தராது: மற்றையவர்க்கும் தராது.

— இ. இ.

# சர்வோதய ஊழியர்கள் மாநாடு

மகாத்மா காந்தியடிகளின் மறைவுக்குப்பின் அவரது மகோன்னத இலட்சியமான சர்வோதய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நாட்டில் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு பல நிறுவனங்களும், பல ஊழியர்களும் முயன்றுவருவதை யாவரும் அறிவர். சர்வோதய தத்துவத்தை ஏற்றுப் பணிபுரிந்து வரும் அன்பர்களிடையே இதுவரை நெருங்கிய தொடர்பு ஏற்படவில்லை. இக்குறையை நீக்கி சர்வோதய சமுதாயப்புரட்சியை விரைவுப்படுத்தும் நோக்கமாக சர்வோதய ஊழியர் ஒன்றுசேரவேண்டுமென்ற கருத்து நீண்ட நாட்களாக நிலவி வந்துள்ளது

காந்தியடிகள் மறைந்து 25 ஆண்டுகள் சென்றபின், இன்றைய உலகு சர்வோதய தத்துவத்தின் முக்கியத்துவத்தை உணரத்தொடங்கியுள்ளது. இவ்வுணர்வு நாட்செல்லச் செல்ல வலுவடைந்து வருமென்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. ஆகவே சர்வோதய சமுதாயத்தை நிறுவுவதற்காக சர்வோதய ஊழியர் திட்டமிட்டுச் செயலாற்றும் காலம் வந்துள்ளது.

சர்வோதய தத்துவத்தைஅடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களுக்கும் ஊழியர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென நீண்ட காலமாயிருந்த ஆவல் நிறைவேறும் சூழ்நிலை உருவாகியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். சர்வோதயப்பணியில் ஈடுபட்டிருக்கும் அன்பர்கள்ஒன்று கூடி ஒருவரையொருவர் அறிமுகஞ் செய்து கொள்வதுடன் சர்வோதய தத்துவத் தெளிவைப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும். இவை மட்டுமல்ல; அவரவர் செய்யும் நிர்மாணப்பணிகள் பற்றிய விபரங்களையும் தெரிந்து கொண்டு பரஸ்பர உதவிக்கான திட்டங்களை வகுத்துக் கொள்வதும் வரவேற்கத்தக்கதாகும்.

வருகிற மாச்சு மாதக்கடைசியில், சர்வோதய ஊழியர்கள் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இம்மாநாட்டில் இலங்கையிலுள்ள சகல சர்வோதய ஊழியர்களும் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## அறிவிப்பு

**சர்வோதய ஊழியர்கள் மாநாடு**

1975 மாச்சு மாதம் 30 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வோதய ஊழியர்கள் மாநாடு பற்றிய விபரங்களுக்கு,

அமைப்பாளர்,
சர்வோதய ஊழியர்கள் மாநாடு,
½, 47 ஆவது ஒழுங்கை,
கொழும்பு 6.
தொலைபேசி: 83579

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| மெல்போன் அவென்யூ | | |
| திருமதி. செ. சின்னத்தம்பி | 6 | 00 |
| " அம்பலவாணர் | 3 | 00 |
| " ந. பத்மநாதன் | 4 | 00 |
| உலக பௌத்த நிலையவீதி | | |
| திருமதி. தி. பொன்னம்பலம் | 6 | 00 |
| " எஸ். சோமசுந்தரம் | 2 | 00 |
| " யோ. சண்முகராஜா | 6 | 00 |
| " ம. மகாலிங்கம் | 2 | 00 |
| " ம. ரூபசிங்கம் | 2 | 00 |
| அலெக்சாந்திரா வீதி | | |
| திருமதி. எஸ். கந்தையா | 10 | 00 |
| கோலை | | |
| திரு. ஆ. விநாயகமூர்த்தி | 27 | 00 |
| வல்வெட்டித்துறை | | |
| திரு. சி. துரைராசா | 4 | 00 |
| வெள்ளாங்குளம் | | |
| திரு கே. வி. ஆச்சாரி | 5 | 00 |
| 47 ஆவது ஒழுங்கை | | |
| திருமதி. தவமணி | 2 | 00 |
| " ச. தம்பிப்பிள்ளை | 3 | 00 |
| " க. இரத்தினசபாபதி | 6 | 00 |
| " அருளம்பலம் | 4 | 00 |

# வரவு செலவு

அகில இலங்கைக்காந்தி சேவா சங்க, கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [ 1974 ஒக்ரோபர், நவம்பர், திசெம்பர்] வரவு- செலவு விபரம்.

வரவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 127 | 86 |
| சர்வோதய பாத்திரம் | 35 | 96 |
| சம்பத்துத்தானம் | 690 | 70 |
| காந்தீயம் | 9 | 00 |
| கோகுலம் | 204 | 13 |
| கமம் | 7 | 00 |
| விடுதிக்கட்டணம் | 60 | 00 |
| கடன் | 2000 | 00 |
| அச்சக நிதி | 20 | 00 |
| மொத்தம் | 3,154 | 65 |

செலவு

| | | |
|---|---|---|
| உணவு | 311 | 53 |
| பிரயாணம் | 123 | 90 |
| கோகுலம் | 329 | 18 |
| சலவை | 53 | 75 |
| சலூன் | 8 | 75 |
| மாணவர் செலவு (படிப்பு) | 47 | 60 |
| வயித்தியம் | 3 | 05 |
| கமம் | 9 | 45 |
| காந்தீயம் | 20 | 00 |
| ஏற்ற- இறக்க | 2 | 00 |
| தபால் | 11 | 00 |
| விழா | 3 | 00 |
| உபகரணம் | 3 | 50 |
| சம்பளம் கைச்செலவு | 127 | 00 |
| வெளிச்சம் | 35 | 06 |
| அச்சகம் | 2003 | 70 |
| கையிருப்பு | 62 | 18 |
| மொத்தம் | 3,154 | 65 |

| | | |
|---|---|---|
| திருமதி. மாணிக்கம் | 3 | 00 |
| " ச. பத்மநாதன் | 2 | 00 |
| " சுப்பிரமணியம் | 4 | 00 |
| " சிவசுப்பிரமணியம் | 1 | 00 |
| இரத்மலானை | | |
| திருமதி. வி. சிங்காரம் | 5 | 00 |
| " எஸ். சிவப்பிரகாசம் | 4 | 00 |
| " என். யோகராஜா | 2 | 00 |
| " எ. ஸி. எம் தாஹா | 3 | 00 |
| " எம். பொன்னம்பலம் | 3 | 00 |
| " கே. சீவரத்தினம் | 8 | 00 |
| " எஸ். கணேசன் | 3 | 00 |
| " எஸ். கருணாநிதி | 1 | 00 |
| " வி. எஸ். சேனாதிராசா | 2 | 00 |
| " சு. தர்மலிங்கம் | 1 | 00 |
| " வி. பெருமாள் | 1 | 00 |

# சம்பத்துத் தானம்

இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக 1974 ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் சம்பத்துததானம் அளித்தவர்கள்.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| **தெகிவளை** | | |
| **இரத்தினகார இடம்** | | |
| திருமதி. வ. இரத்தினம் | 2 | 00 |
| " க. க. சுப்பிரமணியம் | 3 | 00 |
| " எ. அமிர்தானந்தன் | 4 | 00 |
| " செல்வக்காந்தன் | 2 | 00 |
| " ம. கனகலிங்கம் | 6 | 00 |
| " எஸ். கனகசிங்கம் | 6 | 00 |
| " நா. இரத்தினசிங்கம் | 6 | 00 |
| " ஆர். சிதம்பரநாதன் | 3 | 00 |
| "கா. சங்கரப்பிள்ளை | 1 | 00 |
| " க. கந்தசாமி | 1 | 00 |
| " வை. ஆ. கணபதிப்பிள்ளை | 1 | 00 |
| **வெள்ளவத்தை** | | |
| **நகரசபை வீடுகள்** | | |
| திரு. எஸ். வயித்திலிங்கம் | 6 | 00 |
| " எஸ். பி. சோமசுந்தரம் | 3 | 00 |
| **இராமகிருஷ்ண வீதி** | | |
| திரு. எஸ். சிவப்பிரகாசம் | 2 | 00 |
| " பொ. இராசநாயகம் | 6 | 00 |
| " குலசபாநாதன் | 6 | 00 |
| திருமதி. ச. கணேஸ்வரன் | 4 | 03 |
| " இ. தியாகராசா | 7 | 00 |
| " இ. நடராசா | 3 | 00 |
| " சி. கணேசராஜா | 2 | 00 |
| " க. கணபதிப்பிள்ளை | 1 | 00 |
| " சி. சச்சிதானந்தம் | 2 | 00 |
| " சி. சுப்பிரமணியம் | 3 | 00 |
| " ர. குலேந்திரன் | 3 | 00 |
| " பு. கணேசன் | 2 | 00 |
| " சி. சிவஞானப்பிரகாசம் | 3 | 60 |
| " ச. விஜயரத்தினம் | 100 | 00 |
| " க. கணபதிப்பிள்ளை | 5 | 00 |
| " தி. நடராஜா | 3 | 00 |
| " த. சிவகுருநாதன் | 2 | 00 |
| " ம. சிங்கம் | 1 | 00 |
| " சு. பத்மராஜா | 2 | 00 |
| **காலி வீதி** | | |
| திரு. சி. விவேகானந்தன் | 3 | 00 |
| " பொ. அட்சரமூர்த்தி | 6 | 00 |
| " இராசசுந்தரம் | 1 | 00 |
| " நா. ஐயாத்துரை | 6 | 00 |
| **ஈ. எஸ். பெர்னாந்து மாவத்த** | | |
| திருமதி. ஸி. பரராசசேகரம் | 8 | 00 |
| " குமாரசாமி | 6 | 00 |
| " என். கந்தசாமி | 5 | 00 |
| " எம். நேசதுரை | 6 | 00 |
| " விசாகப்பெருமாள் | 2 | 00 |
| " நடராசா | 6 | 00 |
| " கனகசபை | 3 | 00 |
| **36ஆவது ஒழுங்கை** | | |
| செல்வி. யசோதா- சுப்பிரமணியம் | 30 | 00 |
| திருமதி. ஜயதேவன் | 2 | 00 |
| " நவரத்தினம் | 3 | 00 |
| " பி. ஆறுமுகம் | 4 | 00 |
| **வெவசற் பிளேஸ்** | | |
| திருமதி. ம. குணதிலக்க | 3 | 00 |
| **புகையிரத நிலைய வீதி** | | |
| திருமதி. ஆ. குணநாயகம் | 7 | 00 |
| **விவேகானந்த வீதி** | | |
| திரு. எஸ். ஆறுமுகம் | 5 | 00 |
| " எஸ். இராசையா | 6 | 00 |
| " சுந்தரம்பிள்ளை | 2 | 00 |
| செல்வன், சஞ்சீவன்- சிவலிங்கம் | 9 | 00 |
| திருமதி. வி. பாலசுப்பிரமணியம் | 4 | 00 |
| " யோ. திருச்செல்வம் | 2 | 00 |
| " ரதினி. பண்டாரநாயக்க | 4 | 00 |
| " எம். பாலசுப்பிரமணியம் | 1 | 00 |
| **காசப்பா வீதி** | | |
| செல்வி. குந்தவை- கதிர்காமநாதன் | 10 | 00 |
| **ஹாமஸ் பிளேஸ்** | | |
| திருமதி. க. இராசரத்தினம் | 10 | 00 |
| **மெனிங் பிளேஸ்** | | |
| திருமதி. இ. ஜெர்மையா | 3 | 00 |
| " க. இராசலிங்கம் | 15 | 00 |
| " நவரத்தினம் | 3 | 00 |
| **ஹம்டன் ஒழுங்கை** | | |
| திருமதி. ம. பரஞ்சோதி | 3 | 00 |
| **53 ஆவது ஒழுங்கை** | | |
| திருமதி. ப. இராசமாணிக்கம் | 3 | 00 |
| **பசல்ஸ் ஒழுங்கை** | | |
| திருமதி. இராஜேஸ்வரி முதலியார் | 4 | 50 |
| **55 ஆவது ஒழுங்கை** | | |
| திருமதி. இ. சற்குணநாயகம் | 4 | 00 |
| **தயா வீதி** | | |
| திருமதி. ப. இரத்தினசபாபதி | 3 | 50 |
| " செ. இரத்தினதிக்கம் | 6 | 00 |
| **கல்யாணி வீதி** | | |
| திருமதி. இ. இரத்தினம் | 9 | 00 |
| " ச. வே. கந்தசாமி | 3 | 00 |
| " எஸ். தணிகாசலம் | 3 | 00 |
| " த. தனபாலசிங்கம் | 6 | 00 |
| " திருநாவுக்கரசு | 3 | 00 |
| " எஸ். இரத்தினம் | 2 | 00 |
| " எம். கார்த்திகேசு | 3 | 00 |
| **பாக் வீதி** | | |
| திருமதி. சி. கிருஷ்ணராஜா | 9 | 00 |
| **ஹரிச்சந்திர மாவத்த** | | |
| திருமதி. நடராசா | 6 | 00 |
| " க. குமாரசாமி | 6 | 00 |
| " த. மகாதேவன் | 2 | 00 |
| " ம. கனகசபை | 3 | 00 |
| " ச. மாணிக்கவாசகர் | 1 | 00 |
| **சொலமன் அவென்யூ** | | |
| திருமதி. மு. கைலாசபிள்ளை | 6 | 00 |
| **டபிள்யூ. எ. சில்வா மாவத்த** | | |
| திருமதி. தி. கந்தசாமி | 6 | 00 |
| " சொ. இராசநாயகம் | 3 | 00 |
| " பொ. குலசிங்கம் | 2 | 00 |
| " தா. கணேந்திரன் | 8 | 00 |
| செல்வி. தேவகி. செல்லப்பா | 6 | 00 |
| **பாமன்கட ஒழுங்கை** | | |
| திருமதி. ஹைமவதி. சோமசேகரம் | 20 | 00 |
| " செ. காராளசிங்கம் | 4 | 00 |
| " ம. முத்துத்தம்பி | 6 | 00 |
| " ஸி. மணி | 2 | 00 |
| **இராசவல்லி ஒழுங்கை** | | |
| திருமதி. வேலாயுதபிள்ளை | 6 | 00 |
| **கல்கிசை** | | |
| செல்வி. த. சிதம்பரநாதர் | 3 | 00 |
| **பம்பலப்பிட்டி** | | |
| **மாடி வீடுகள்** | | |
| திருமதி. விநாயகமூர்த்தி | 2 | 00 |
| " சுப்பிரமணியம் | 18 | 00 |
| " ஆறுமுகம் | 3 | 00 |
| வி. இராசசேகரம் | 1 | 00 |
| " செல்வத்துரை | 3 | 00 |

(3 ஆம் பக்கம் பார்க்க)

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.